ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2149/18 - 2019 නොවැම්බර් මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.11.14
*2149/18 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம், மேற்குறித்த பிரிவின் கீழ் 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதிய 2007/24 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதிய 1465/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட கட்டளையானது இதனகத்துப் பின்னர் வந்துள்ள அட்டவணையில் 35 ஆம் விடயத்திற்கு உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தினை ஒன்றுசேர்ப்பதன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.*

*“36. அரசாங்கத்தினால் அல்லது அரசாங்கத்தின் சார்பில் எவரேனும் ஆளொருவரினால் அல்லது 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையினால், ஏதேனும் இடமொன்றினைக் குத்தகைக்கு விடுகையில், அரச தரப்பொன்றான உடன்படிக்கையொன்றுக்கு அமைய குத்தகையாளரினால் குத்தகைத் தவணைக் கொடுப்பனவுகள் மற்றும்/ குத்தகை வாடகை/ வருபேறுகள் என்பனவற்றுடன் சம்பந்தப்பட்டவாறு, அரசாங்கத்திற்கு அல்லது குறித்த நகர அபிவிருத்தி அதிகார சபைக்குப் பணமாகச் செலுத்த முடியாதவிடத்து, குறித்த குத்தகைக்கு விடுவதோடு சம்பந்தப்பட்ட சாதனப்பத்திரம்”.*

*மங்கள சமரவீர,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2019, நவெம்பர் 14.*

*11-1642*

1A - G 31456 — 67 (2019/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*